செய்தி வெளியீடு எண்: 10 நாள்: 03.10.2019.

**தேனி மாவட்டம்,**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் 1,597 பயனாளிகளுக்கு ரூ.20.53 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், தேனி-அல்லிநகரம் நகராட்சியில் கூட்டுறவுத்துறையின் சார்பில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு விழாவில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் சார்பில் 1,597 பயனாளிகளுக்கு ரூ.20.53 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகளை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

கடனுதவிகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

ஒரு மகனை ஈன்று இந்த உலகிற்குத் தருவது, தாயின் கடமை. அந்தப் பிள்ளையை, தக்க கல்வி தந்து சான்றோன் ஆக்குவது தந்தையின கடமை. அவன் தன் வீரத்தை வெளிப்படுத்த, வேல் முதலான கருவிகளை செய்து தருவது கொல்லர்களின் கடமை. நன்னெறிகளை நடைமுறைப்படுத்தி, ஆள வேண்டியது அரசின் கடமை. ஒளிருகின்ற வாளை, தன் கரம் பற்றி, களிறுகளை வெற்றி கொள்ள வேண்டியது காளைகளைப் போன்ற இளைஞர்களின் கடமை என்று ஒரு தாயாக இருந்து, தனக்கும். மற்றவர்களுக்கும் உள்ள கடமைகளை எடுத்து கூறுகிறார் புலவர் பொன்முடியார்.

கடன் என்னும் சொல் கால ஓட்டத்தில் கடமை என்னும் பொருளை உள்ளே வைத்தும், திருப்பித் தர வேண்டியது என்னும் அர்த்தத்தை வெளிப்படையாகவும் கொண்டு, பணம் கொடுத்தல் வாங்கலிலும், ரொக்க வரவு செலவுகளிலும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் கடன் என்பது பணமோ, பொருளோ, தாங்கள் பெற்றதைப் பயன்படுத்தி, முன்னேற்றம் காண வேண்டிய பொறுப்புணர்வையும், மறுப்புச் சொல்லாமல் திருப்பித் தந்திட வேண்டும் என்னும் கடமை உணர்வையும் தனக்குள் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகில் தங்கள் வாழ்க்கையில் கடன் வாங்காதவர்கள் என்று யாரும் இல்லை என்றுதான் கூற வேண்டும். சிறு ஏழை முதல் பெரும் பணக்காரர் வரை தங்கள் தேவைகளுக்கு ஏற்ப பிறரிடமோ, வங்கிகளிடமோ கடன் வாங்குவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்ற உலக வங்கி மற்றும் பிற நிதி நிறுவன அமைப்புகளிடமிருந்து, மத்திய மாநில அரசுகளும் கடன் வாங்குகின்றன. இந்த உலகில் வாழுகின்ற, அனைவருமே ஏதாவது ஒரு வகையில் கடன்பட்டுத்தான் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறாகள்.

நமது வீட்டில் பெண்மணிகள் சர்க்கரை என்றும், காப்பி பொடி என்றும் அண்டை வீடுகளில் கடன் வாங்குதல், கொடுத்தல், மூலம் ஒரு அன்னியோன்னியத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். மற்றவர்ககளோ வீட்டுக்கடன், நகைக்கடன், வண்டிக்கடன், தனிக்கடன், சம்பளக்கடன் என்று வகை வகையான கடன்களை வாங்கி, தங்களது வாழ்வை வளப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

மனிதர்கள், தங்கள் வாழ்வில் வளம்பெற கடன் வாங்கலாம் என்று பொருளியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒருவர் சொந்தமாக வீடு வாங்க வேண்டும் என்று சொன்னால, அந்த வீட்டிற்கான முழு மதிப்பையும், சம்பாதித்த, மொத்தமாக சேர்த்து 20 வருடம் கழித்து வாங்குவது என்பது இயலாது. அதைவிட இன்று கடன் பெற்று அந்த வீட்டை வாங்கி 20 வருடங்களில் சிறுக, சிறுக அந்தக் கடனை அடைத்து வீட்டை உரிமையாக்கிக் கொள்வதுதான் அறிவார்ந்த செயல் என்று, பெருளாதார வலலுநர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்.

இதனைக் கருத்தில் கொணடே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அடித்தட்டு மக்களுக்கும், நடுத்தர வர்கத்தினருக்கும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதை பெரிதும் ஊக்குவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நடக்கும் அம்மா அவர்களின் வழி நடக்கும் இந்த அரசு இன்று தேனி மாவட்டத்தில் 1,597 நபர்களக்கு ரூ.20 கோடிக்கு மேல் கடன் வழங்கி உள்ளது.

வாங்கிய கடன்களை திருப்பி செலுத்துவதில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தலை நிமிர்ந்து நிற்கிறது. இந்த இலக்கணத்திற்கு உகந்த வகையில் கடனுதவிகள் பெறும் அனைவரும் தங்களது வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதோடு, வாங்கிய கடனை முறையாக திரும்ப செலுத்தி தொடர்ந்து இதனனினும் அதிக கடன் பெற்று அதன் மூலம் வாழ்க்கையை மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் பிறரிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்துவது நமது அன்னை, தநதையரால் நாம் வளர்க்கப்பட்ட முறையினையும், நேர்மையும் எடுத்துக் கூறும். நமது சுயமரியாதையை இந்த உலகிற்கு வெளிச்சமிட்டு காட்டும்.

வாழ்க்கையில் நேர்மையாளனாக வாழ்வது பெரிய விஷயம். அதே நேரத்தில் தவறுகள் செய்யக்கூடிய சந்தர்ப்பமும், வாய்ப்பும் வாய்த்தாலும் நேர்மையாக வாழ்வது அதனினும் பெரிய விஷயமாகும். வாழ்வில் ஒரு நாள் நேர்மையாக வாழ்ந்து பார்த்து அதன் ருசியை நாம் உணர்ந்து விட்டால் அதன் பின் நாம் எதற்காகவும் நேர்மையை இழக்க மாட்டோம். தவறும் செய்ய எண்ண மாட்டோம் என தெரிவித்தார்.

தலைமையுரையாற்றி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவத்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 10 கிளைகளும், 80 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளிட்ட 118 கூட்டுறவு நிறுவனங்கள் தேனி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

பயிர்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 2011-ஆம் ஆண்டு முதல் 2019 வரை 85 இலட்சத்து 16 ஆயிரத்து 61 நபர்களுக்கு ரூ.44,417.25 கோடியும், நடப்பாண்டில் மட்டும் 3,57,439 நபர்களுக்கு ரூ.2,627.08 கோடி மதிப்பீட்டில் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில், தேனி மாவட்டத்தில் 83,552 நபர்களுக்கு ரூ.657.80 கோடியும், நடப்பாண்டில் 2,916 நபர்களுக்கு ரூ.26.35 கோடியும் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 நபர்களுக்கு ரூ.5,318.73 கோடி பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதில் தேனி மாவட்டத்தில் 81 கூட்டுறவு சங்கங்கள் மூலம் 12,488 நபர்களுக்கு ரூ.85.51 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி, தானே புயல், வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம், பயிர் கடன் தள்ளுபடி, குறுவை, சம்பா தொகுப்பு, பயிர்காப்பீடு போன்ற வகையில் தமிழக முழுவதும் 2011-ஆம் ஆண்டு 2019 வரை முதல் 1 கோடியே 12 இலட்சத்து 47 ஆயிரத்து 796 நபர்களுக்க ரூ.16,833.21 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பயிர்காப்பீடு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்த 24,03,497 விவசாயிகளுக்கு ரூ.5,810.18 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 13,76,910 விவசாயிகளுக்கு ரூ.3.629.47 கோடியும், தேனி மாவட்டத்தில் பயிர் காப்பீடு இழப்பீட்டு தொகையாக 493 நபர்களுக்கு ரூ.73.73 இலட்மும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2011-ஆம் ஆண்ட முதல் 57,483 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.231.19 கோடியும், தேனி மாவட்டத்தில் 156 நபர்களுக்கு 1.02 கோடியும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தல் 2011-ஆம் ஆண்டு முதல் 1,94,774 நபர்களுக்கு ரூ.2,379.34 கோடி தானிய ஈட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 14,86,321 நபாகளுக்கு ரூ.1,743.93 கோடியும், தேனி மாவட்டத்தில் 21,533 நபர்களுக்கு ரூ14.54 கோடி சிறு வணிக கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக முழுவதும் வைப்புத்தொகை கடந்த 31.03.2011 அன்று ரூ.26,245.17 கோடியாக இருந்தது, தற்சமயம் 31.08.2019 அன்று வரை ரூ.53,174.84 கோடியாக உயர்ந்துள்ளது. ஆக கூடுதல் வித்தியாசம் ரூ.26,929.67 கோடியாகும். தமிழகததில் கடந்த 9 ஆண்டுகளில் 7 கோடியே 26 ஆயிரத்து 136 நபர்களுக்கு ரூ.3,41,547.95 கோடியும், தேனி மாவட்டத்தில் கடந்த 9 ஆண்டுகளில் 6,38,959 நபர்களுக்கு ரூ.2,513 கோடி மதிப்பீட்டில் அனைத்து விதமான கடன்களும் வழங்கப்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கியின் கீழ் 120 கிளைகள் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் துவக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் கீழ் தலைமை அலுவலகம் உட்பட 47 கிளைகளும், 10 ஏ.டி.எம் மையங்களும் திறப்பட்டுள்ளன. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கீழ் 878 கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டத்தில் புதிதாக மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையும், 12 அம்மா சிறுகூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கப்பட உள்ளது. கூட்டுறவுத்துறையின் மூலம் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 23,483 முழு நேர நியாய விலைக்கடைகளும், 9,457 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் என மொத்தம் 32,940 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தில் 401 நியாயவிலைக்கடைகளும், 95 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் என மொத்தம் 496 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன.

*தற்சமயம், தமிழகம் முழுவதும் 674 முழு நேர நியாய விலைக்கடைகளும், 1,731 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் என மொத்தம் 2,405 நியாய விலைக்கடைகளும், தேனி மாவட்டத்தில் 16 முழு நேர நியாயவிலைக்கடைகளும், 25 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் என மொத்தம் 41 நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றன.*

*அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் மாநிலத்தில் 685 அங்காடிகள் திறந்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 216 சிறப்பு அங்காடிகள் திறக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் மொத்தம் அம்மா மருந்தகம், கூட்டுறவு மருந்தகங்கள் என 287 மருந்தகங்கள் மூலம் ரூ.863.85 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதில், தேனி மாவட்டத்தில் 3 அம்மா மருந்தகம், 6 கூட்டுறவு மருந்தகங்கள் என 9 மருந்தகங்கள் மூலம் ரூ.9.01 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று கூட்டுறவுத்துறையில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, தமிழகத்தின் வளர்ச்சிப்பாதையில் அடிப்படையாய அமைந்துள்ளது என தெரிவித்தார்.*

*இவ்விழாவில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத்குமார், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், தமிழ்நாடு மாநில கூட்டுறவு நூற்பாலை இணையத்தலைவர் ஜி.திருலோகசந்தர், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் எம்.எஸ்.பாண்டியன், தமிழ்நாடு கூட்டுறவு மாநில மேலாண்மை மற்றும் ஊரக வங்கி துணைத்தலைவர் அ.இளையநம்பி, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் ஆர்.ராஜகுரு, தேனி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் க.ஜெயலட்சுமி கணேசன், உத்தமபாளையம் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் பி.ஆர்.பி.அழகர்ராஜா, தமிழ்நாடு கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கூடுதல் பதிவாளர் இரா.பிருந்தா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் ச.ஜெயப்பிரித்தா, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் ம.தீபாசங்கரி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவ.முத்துகுமாரசுவாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.எம்.சையதுகான், ஆர்.பார்த்திபன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***